**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 63/2012 C/W அ.வ. 208/2011**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.09.2025 | தகப்பனார் பெயர்: | தமிழரசன் |
| பெயர்: | சோழரசன்<br>(DW–2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாங்கூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 40/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 10.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.25)**

1. இந்த வழக்கு யார் யார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் ராமகிருஷ்ணன் என்பவர் பாலசுந்தர் என்பவர் மீது கொடுத்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 ஏக்கர் 20 செண்ட்டில் பாதி இடம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து செம்மங்குடி வட்டம் குளத்தூரில் உள்ளது.

2. செம்மங்குடி சீர்காழி டவுனிலிருந்து 4 கி.மீ கிழக்கே உள்ளது என்றால் சரிதான். எனது ஊரான நாங்கூர் சீர்காழிக்கு தென்கிழக்கே சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். பாலசுந்தர் எனக்கு மாமா உறவுமுறை ஆவார். பி.வா.சா.ஆ.1 ல் நானும், செல்வராஜூம் சாட்சி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்திலும் நானும், செல்வராஜூம் சாட்சி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான்.

3. பாபுவின் வாக்காளர் அட்டையை சரிபார்த்து தான் சார் பதிவாளர்

அலுவலகத்தில் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வாக்காளர் அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி என்ற முறையில் என்னுடைய அடையாள அட்டையும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. என்னுடைய வாக்காளர் அடையாள அட்டை வாங்கி சரிபார்க்கப்பட்ட விபரம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. பாபு என்பவர் எந்த வகுப்பு வரை படித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பாபு என்பவர் ரஹ்மானியா உயர்நிலைப்பள்ளியில் படித்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சிவா என்பவரை நான் பார்த்ததில்லை. பாபுவின் தாயாரை நான் பார்த்ததில்லை.

5. பாபுவின் தகப்பனார் சிவா எந்த வருடம் இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சிவாவின் வாரிசுச் சான்றிதழை நான் பதிவாளர் அலுவலகத்தில் பார்த்துள்ளேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் சிவாவின் வாரிசுச் சான்று சரிபார்க்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து பாலசுந்தருக்கு முன்பு யாருக்கு உரிமையானது என்ற விபரம் எனக்கு தெரியாது.

6. பாலசுந்தருக்கு முன்பு யாருக்கு உரிமையானது என்ற விபரம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். சிவாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் பாபுவை மட்டும்தான் தெரியும். பாபுவின் தாயார் எப்போது இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பாபுவின் தாயார் பெயர் கலா. சிவாவிற்கும் கலாவிற்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விபரம் எனக்கு தெரியாது.

7. அவர்கள் எங்கு கணவன் மனைவியாக வாழ்ந்தனர் என்ற விபரம் எனக்கு தெரியாது. நானும் பாலசுந்தரும் சேர்ந்து மோசடியாக இந்த ஆவணத்தை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் இருக்கும் சொத்து எந்த வகையிலும் பாபுவிற்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. பாபுவின்

தகப்பனார் பெயர் சின்னையன் என்றால் சரியல்ல. பாபு சிவாவின் மகனாக ஆள் மாறாட்டம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. பாபு சீர்காழியில் ஏற்கனவே இருந்தார், தற்போது சீர்காழியில் எங்குள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பாலசுந்தருக்கு உறவினர் என்ற வகையிலும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூட்டு சேர்ந்து தயார் செய்து சாட்சி கையொப்பம் இட்டதன் அடிப்படையிலும் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பாபுவும் ஒரு பிரதிவாதியாக உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–13.50)**